பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

03 10 2026 SATURDAY 7 15 AM

ஆகாஷ்வாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. சுகாதாரத் துறையில் நவீன தொழில்நுட்பங்கள் முக்கியப்பங்கு வகிப்பதாக மத்திய இணையமைச்சர் டாக்டர். ஜிதேந்திர் சிங் கூறியுள்ளார்.

2. கப்பல் கட்டுமானத்தில் இந்தியா தன்னிறைவு பெற்ற நாடாக உருவெடுக்கும் என்று அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு சர்பானந்த சோனோவால் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

3. எரிபொருள் மீதான விலை உயர்வை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை இணைந்து மேற்கொள்வது என ஜி-7 உறுப்பு நாடுகள் முடிவு செய்துள்ளன.

4. அருணாசலப்பிரதேசத்தில் ஓரிரு இடங்களில் அடுத்த இரு தினங்களுக்கு கன மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஆசிய விளையாட்டுப் போட்டியில், ஆடவர் டுவெண்ட்டி -டுவெண்ட்டி கிரிக்கெட் போட்டி இறுதியாட்டத்தில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<><><><><><><><>

சுகாதாரத் துறையில் ரோபோட்டிக்ஸ் முக்கியப்பங்கு வகிப்பதாக மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர். ஜிதேந்திர் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற சுகாதார துறையில் நவீன தொழில் நுட்பங்களின் பயன்பாடு குறித்த சர்வதேச மாநாட்டில் உரையாற்றிய அவர் இதனை தெரிவித்தார்.

மருத்துவ சிகிச்சையில் நவீன தொழில்நுட்பங்களின் பயன்பாடு அதிகரித்து வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

ரோபோட்டிக்ஸ், செயற்கை நுண்ணறிவு போன்ற தொழில்நுட்பங்கள் புவிசார் எல்லைகளை கடந்து சுகாதாரதுறையின் செயல்பாட்டை மேம்படுத்த உதவிடும் என்று அவர் கூறினார்.

சுகாதாரதுறையில் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்துவது குறித்து கல்வி நிறுவனங்கள் மற்றும் இதுபோன்ற தொழில்முறை சார்ந்த மாநாடுகளில் விவாதிக்கப்பட வேண்டும் என்று டாக்டர். ஜிதேந்திர சிங் வலியுறுத்தினார்.

<><><><><><><><>

விவசாயிகளின் வருவாயை அதிகரிக்கும் வகையில் வேளாண் உற்பத்தியில் நவீன தொழில்நுட்பம் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு

முக்கியத்துவம் அளிக்க வேண்டியதன் அவசியத்தை மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் வலியுறுத்தியுள்ளார்.

ஆந்திரப்பிரதேச மாநிலம் மதனபள்ளியில் சர்வதேச தோட்டக்கலை மையம், மற்றும் வேளாண் பயிற்சி நிறுவனத்தை அமைப்பதற்கான திட்டங்களுக்கு அவர் அடிக்கல் நாட்டி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், விவசாயிகளின் மேம்பாட்டிற்காக மத்திய அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களை அவர் பட்டியலிட்டார்.

வேளாண் துறையில் நவீன தொழில்நுட்பங்கள், அறிவியல் பூர்வமான வேளாண் நடைமுறைகள், ஆராய்ச்சிகள் போன்றவற்றின் மூலம் விவசாயிகளுக்கு உதவிடும் வகையில் இந்த நிறுவனம் செயல்படும் என்று திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

<><><><><><><><>

கப்பல் கட்டுமானத் துறையில், தன்னிறைவு பெற்ற நாடாக இந்தியாவை உருவெடுக்கச் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக, மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனோவால் தெரிவித்துள்ளார்.

மும்பையில், இந்திய கப்பல் கழகத்தின் 65 ஆண்டுகால செயல்பாடுகளைக் குறிக்கும் வகையில் நடைபெற்ற விழாவில் உரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்தார்.

கப்பல் கட்டுமானத் துறையில் ஏராளமான வாய்ப்புகள் உள்ளதாக அவர் கூறினார்.

இந்தியாவை கடல்சார் பாதுகாப்பு, உற்பத்தி மற்றும் தொழில்துறையில் உலகின் முன்னணி நாடாகவும், சர்வதேச சந்தையில் போட்டியிடக் கூடிய வலிமை கொண்ட நாடாகவும் மாற்றுவதற்கு ஒருங்கிணைந்த செயல்பாடுகள் அவசியம் என்று அவர் தெரிவித்தார்.

ஹார்மோஸ் நீரிணைப் பகுதியில் நிலவிய பதற்றத்தின் போது, இந்தியாவின் எரிசக்தி மற்றும் வர்த்தகப் பாதுகாப்பை உறுதி செய்வதில் இந்தியக் கப்பல் கழகத்தின் பங்களிப்பை அமைச்சர் எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் காணொளி வாயிலாக உரையாற்றிய மத்திய கப்பல் போக்குவரத்து அமைச்சகச் செயலாளர் திரு விஜய் குமார், நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டு இக்கட்டான தருணங்களில், இந்திய கப்பல் கழகம் பாதுகாப்பு அரணாக செயல்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

1961-ம் ஆண்டில், 19 கப்பல்களுடன் ஏற்படுத்தப்பட்ட இந்த நிறுவனம், தற்போது 5.26 மில்லியன் டன் மொத்தத் திறனுடன் 58 கப்பல்களை இயக்கி வருகிறது.

<><><><><><><><>

இந்தியா – ஸ்பெயின் இடையேயான கூட்டுக் கடற்பயிற்சியில் பங்கேற்பதற்காக, இந்திய கடற்படைக்கு சொந்தமான திரிசூல் போர்க்கப்பல் Valencia துறைமுகம் சென்றடைந்துள்ளது.

இதுதொடர்பாக பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இவ்விரு நாடுகளின் கடற்படைகளும் இணைந்து போர் ஒத்திகை, விளையாட்டு, கலாச்சாரம் என பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<><><><><><><><>

நாடு முழுவதும் காதி பொருட்களுக்கு சிறப்பு தள்ளுபடி வழங்கப்படும் என்று காதி கிராம தொழில்துறை ஆணையத்தின் தலைவர் திரு. மனோஜ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், காதி பொருட்களுக்கு 20 சதவீத தள்ளுபடியும், கிராம தொழில்துறை சார்ந்த தயாரிப்புகளுக்கு 10 சதவீத தள்ளுபடியும் வழங்கப்படும் என அவர் தெரிவித்தார்.

இந்த சிறப்பு தள்ளுபடி அடுத்த மாதம் 16ஆம் தேதி வரை அமலில் இருக்கும் என்று அவர் கூறினார்.

சுயசார்பு இந்தியாவிற்கான இலக்குகளை எட்டுவதில் காதி தயாரிப்புகள் முக்கியப் பங்கு வகிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

நடப்பாண்டில் காதி பொருட்களுக்கான விற்பனை இலக்கு 2 லட்சத்து 51 ஆயிரம் கோடி ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக திரு. மனோஜ் கோயல் கூறினார்.

<><><><><><><><>

எரிபொருள் மீதான விலை உயர்வை கட்டுப்படுத்தும் வகையில் கையிருப்பிலிருந்து 100 மில்லியன் பேரல் டீசலை விடுவிக்க ஜி-7 உறுப்பு நாடுகள் முடிவு செய்துள்ளன.

ஜி-7 நாடுகளிடையே காணொளி வாயிலாக நடைபெற்ற ஆலோசனை கூட்டத்திற்கு பின்னர் வெளியிடப்பட்ட அறிக்கையில், சர்வதேச எரிசக்தி முகமையுடன் இணைந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கிடையே எரிபொருள்களின் உயர்வு சர்வதேச அளவிலான டீசல் வினியோகம் வர்த்தக முரண்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

பெட்ரோலியப் பொருட்கள் மீதான விலைஉயர்வை கட்டுப்படுத்தும் வகையில், உறுப்பு நாடுகளுடன் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள பிரான்ஸ் முடிவு செய்துள்ளதாக அந்நாட்டு அதிபர் திரு. இமானுவேல் மேக்ரோன் தெரிவித்துள்ளார்.

<><><><><><><><>

பஞ்சாப் மாநிலத்தின் எல்லையையொட்டிய பகுதியில் இந்தியாவுக்குள் அத்துமீறி ஊடுருவ முயன்ற 2 தீவிரவாதிகளை எல்லைப் பாதுகாப்புப் படையினர் சுட்டுக்கொன்றனர்.

பலமுறை எச்சரிக்கை விடுத்தும் எல்லை பகுதியில் அத்துமீறி நுழைய முயற்சி மேற்கொண்டதை அடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக பாதுகாப்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.

<><><><><><><><>

உலக வர்த்தக அமைப்பின் விதிமுறைகளுக்கு ஏற்ப நாடுகளுக்கிடையேயான வர்த்தக நடவடிக்கைகள் உறுதி செய்யப்பட வேண்டும் மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்காவில் நடைபெற்ற ஜி-20 வர்த்தக அமைச்சர்களின் மாநாட்டின் நிறைவு நாள் நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், இதனை தெரிவித்தார்.

ஜி-20 உறுப்பு நாடுகளுடனான இந்தியாவின் வர்த்தகம் வெளிப்படையாகவும், சர்வதேச விதிகளின் அடிப்படையிலும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

புவிசார் அடிப்படையிலான உற்பத்தி, மறைமுக மானியம் வழங்குவது போன்ற சில நாடுகளின் செயல்பாடுகள் சர்வதேச வர்த்தகத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் என்று அவர் தெரிவித்தார்.

உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்வதுடன் உலகளவிலான வர்த்தக நடைமுறைகளிலும் இந்தியா கவனம் செலுத்தி வருவதாக திரு. பியூஷ் கோயல் குறிப்பிட்டார்.

<><><><><><><><>

பிரதமருக்கு வழங்கப்பட்டுள்ள நினைவுப் பரிசுப் பொருட்களுக்கான மின்னணு ஏல நடைமுறைகள் இம்மாதம் 31 ஆம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக மத்திய கலாச்சாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த ஏலத்தில் 30 விதமான பரிசுப் பொருட்கள் இடம்பெறும் என்று அந்த அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<><><><><><><><>

வெளிநாட்டிலிருந்து இந்தியாவிற்கு சட்டவிரோத தங்கக் கடத்தல் முயற்சியை மத்திய வருவாய் புலனாய்வு இயக்குநரகம் முறியடித்துள்ளது.

மும்பை சத்ரபதி சிவாஜி சர்வதேச விமான நிலையத்தில், அதிகாரிகள் மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகளின் போது, 12 கோடியே 64 லட்சம் ரூபாய் மதிப்பிலான 8 கிலோ வெளிநாட்டுத் தங்கம் மற்றும் ஒரு கோடியே 9 லட்சம் ரூபாய் மதிப்பிலான 1,168 கேரட் வைரம் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக, இந்தியாவைச் சேர்ந்த பயணி ஒருவர், விமான நிலைய ஊழியர் ஒருவர் என மொத்தம் எட்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் சுங்கத்துறை அதிகாரிகள் தொடர்ந்து விசாரணை நடத்தி வருவதாக நிதியமைச்சகத்தின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

<><><><><><><>

அருணாசலப்பிரதேசத்தில் ஓரிரு இடங்களில் அடுத்த இரு தினங்களுக்கு கன மழைக்கு வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால், ஆந்திரப்பிரதேசம், கேரளம், மஹே உள்ளிட்ட இடங்களில் அடுத்த 3 தினங்களுக்கு பரவலாக மிதமான மழை பெய்யக்கூடும் என்று அந்த அமையம் கூறியுள்ளது.

சிக்கிம், இலட்சத் தீவுகள், இமயமலையையொட்டிய பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்பு உள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.

<><><><><><><><>

ஆசிய விளையாட்டுப் போட்டியில், ஆடவர் டுவென்ட்டி -டுவென்ட்டி கிரிக்கெட் போட்டி இறுதியாட்டத்தில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

ஜப்பானில் நடைபெறும் இப்போட்டி காலை 10.30 மணிக்குத் தொடங்குகிறது.

-------------

இந்தியா - வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கிடையேயான மூன்றாவது மற்றும் இறுதி ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

நியூ சண்டிகரில் இப்போட்டி, பிற்பகல் 2.00 மணிக்குத் தொடங்குகிறது.

----------------------

Dutch ஓபன் பாட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Aakarshi Kashyap, காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில், அவர் 21-11, 21-7, என்ற செட் கணக்கில், ஸ்விட்சர்லாந்தின் Azkya Aliefa Ruhanda-ஐ வென்றார்.

----------